# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

10வது ஆண்டில்

விளம்பரம் VLAMBARAM

(416) 282-8059

(416) 282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 JANUARY 15, 2001 பாலம் 02



- தொழிலாளர் நலன் பேணும் யோகாசனம் (பக். 13)
- தைப்பொங்கல் - நன்றித் திருநாள் (பக். 11)
- 1983 - பல புதிய நடிகர்களிற்கு புத்தாண்டு (பக். 07)
- Alien உண்மையானால் கடவுள் உண்மையாகுமா? (பக்.9)
- மிலேனியத்தில் டிஜிரல் கமராவின் பலன்கள் (பக். 08)
- 2000 இல் சிறந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் (பக். 2)
- அக்குபஞ்ஜர் புகைத்தலை நிறுத்துமா? (பக். 12)
- 2001இல் வீட்டின் விலை எங்கே செல்லும்? (பக். 17)




## உலக தமிழோசை

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்நாளில் இறைவன் அருளால் யாவரிற்கும் சகல சௌபாக்கியங்களும் பெற நல்வாழ்த்துக்கள் கூறுகின்றோம். - உலக தமிழோசை




இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787

☎: (416) 269-8151

2602 B Eglinton Ave. E., Scarborough


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- இறைவனுடைய அன்பை உணராதவர்கள் வானத்தை உற்று நோக்கும் குருடர்க்கு ஒப்பாகிறார்கள்.
- பிருந்தாவனத்தில் அன்று ஒலித்து குழல் ஒசை இன்று உன்னைக் காப்பாற்ற வல்லதன்று. அதே ஓசை இன்று உன் உள்ளத்தில் கேட்பாயாகில் அது உன்னைக் காக்க வல்லது ஆகின்றது.

## உலக நாடுகள் வரிசையில் அவுஸ்திரேலியா (Australia)

உலகில் உள்ள கண்டங்களில் மிகவும் சிறிய கண்டமாகவும், (CONTINENT) உலகில் உள்ள நாடுகளில், மிக பெரிய நான்கு பக்கமும் சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஒரு நாடு அவுஸ்திரேலியா ஆகும். உலகின் பல நாடுகளை பிரித்தானியர்கள் ஆட்சி செய்த காலங்களில், குற்றவியல் கைதிகள் என்று தீர்மானிக்கப் பட்டோரைக் கப்பல்களில் கொண்டு வந்து குடியேற்றி அந்த வம்சாவழிகளில் உருவாக்கப்பட்ட ஒரு நாடு "'அவுஸ்திரேலியா' எனவும் இதன் வரலாறுகளில் குறிப்பிடப்படுவது உண்டு.

பரப்பளவு: 2,941,299 ச.மைல்கள் ஆகும்.

மக்கள் தொகை: 17,78200 பேர் (1992 ஆம் ஆண்டு கணிப்பின் படி)

தலைநகரம்: ஹன்பரா (CANBERRA)


(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)


## உன்னை அறிந்தால்

சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகளில் ஒன்று; உண்மையில்லாத எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இரு, உண்மையாக - நேர்மையாக நட, அதனைத் தொடர்ந்து கடைபிடி. மெதுவாக என்றாலும் வெற்றி என்பது நிச்சயம் உளதாகும்.

தேவையில்லாத விடயங்களில் தலையிட்டு பிரச்சனைகளை தலையில் சுமத்திக் கொள்வது, யானை தன் தும்பிக்கையாலே தனது தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொள்வதைப் போலவும் இல்லாமல தேவையான விடயங்களிலே தலையிடுவதே சரியாகும். மற்றையவர்களின் விடயங்களில் தலையைக் கொடுக்காமல் இருப்பதே சிறந்தது. பொதுவாக எல்லாவிடயங்களிலும் எச்சரிக்கையாகவும் கவன-மாகவும் இருப்பதே நல்லது. சில நன்மைகள் அல்லது குறுகிய கால நன்மைகள் போன்றவற்றிற்கு உண்மையை மறைத்து பொய்யிற்கு துணைபோவது சரியன்று. உண்மை உடனடியாக தோல்வியுறலாம். என்றோ ஒருநாள் வெற்றி பெற்றே தீரும். அரிச்சந்திரன், சத்தியமூர்த்தியாக இன்றும் பேசப்படுவதற்கு காரணம் என்ன? **நேர்மை.**

பிறக்கும் உயிரினங்கள் யாவும் அழிந்தே தீரும். இது இயற்கையின நியதி. "காயமே பொய்யடா, இது காத்தடித்த பையடா" எனப பட்டினத்தடிகள் பறைசாற்றியுள்ளார். நிரந்தரமற்ற இவ் வாழ்க்கைக்கு அடிமைப்பட்டு உண்மையை பொய்யெனவும், பொய்யை உண்மை எனவும் பித்தலாட்டம் போடுவது நியாயமா? மெல்லவனை வல்லவன் அடிமைப்படுத்தலாம். என்றோ ஒரு நாள் உண்மை தன் சுய உருவத்தைக் காட்டியே தீரும். அப்பொழுது பொய்யெல்லாம் உண்மைக்கு அடிமையாகவே இருக்கவேண்டும். எனவே ஒருவரின உடனடி நன்மைக்காக, பலரின் வாழ்க்கைக்கு, தெரிந்து செய்யும் தப்பை தவிர்ப்பதே, மனிதநேயம், மனித பண்பு. எல்லாவற்றிற்கும் மேலாக தனக்குத் தானே செய்யும் மிகப் பெரிய கைங்கரியம்.

**நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதையே செய்போம். நாளை நமதே.**

-நெற்றிக்கண்ணன்

**உலக தமிழோசை ஆக்கங்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்**




## சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

## துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

## Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

LIBERTY MUTUAL.

✆ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975

10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD. TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059

FAX: (416) 282-4978

e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (72)



-விஜே குலத்துங்கம்

2001 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருப்பதால் 2000 ஆண்டில் விஞ்ஞான உலகம் எதைச் சாதித்தது. எந்த விடயங்கள் விஞ்ஞானச் செய்திகளில் கூடுதலாக பேசப்பட்டன என்பதைப் பார்த்தோம். சென்ற ஆண்டு மிகவும் அதிகமாகப் பேசப்பட்டதும், சென்ற ஆண்டு மாத்திரமல்ல, சென்ற நூற்றாண்டிலுமல்ல, மனிதரின் சரித்திரத்திலேயே மிகப் பெரிய கண்டுபிடிப்பு என்று கருதப்பட்டதுமான விடயம்தான் மனிதரின் பிறப்புரிமைக் கட்டமைப்பினை அறிந்து கொண்டதாகும். சென்ற வருடம் ஜூன் மாதம் 26 ஆம் திகதி GENOME MAPPING என்று சொல்லப்படும் உடலிலுள்ள நிறமூர்த்தங்களில் அமைந்துள்ள பல்லாயிரக்கணக்கான Gene களின் கட்டமைப்புகளில் 97 வீதத்தை கண்டறிந்ததாக அறிவித்தார்கள். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துதான், விஞ்ஞானிகள் இந்த அறிவிப்பைச் செய்யும் போது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனும், பிரித்தானிய பிரதம மந்திரி டொனி பிளாயரும் ஒன்றாக வீடியோ conferencing என்ற முறை மூலம் தொலைக்காட்சி மூலமாக ஒருவருடன் ஒருவர் உரையாடி, ஒன்றாக உலகம் முழுவதும் தொலைக்காட்சியினூடாக இந்த அறிவிப்பை விடுத்தார்கள்.

இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி ஏற்கனவே வெளிவந்த கட்டுரைகளில் கூறியுள்ளோம். சுருக்கமாகக் கூறப்போனால் இந்த gene கட்டமைப்பற்றிய கண்டுபிடிப்பு எதிர்காலத்தில் மனிதனின் தலையெழுத்தையே மாற்றக் கூடியது என்று கூறலாம். பலவிதமான நோய்களைத் தீர்க்கவும், வலுவுள்ள சந்ததிகளை உருவாக்கவும், மனிதனின் வாழ்நாளை இது கூட்டக்கூடியதாகவும் இருக்கும். Gene கட்டமைப்பை பரிசீலிப்பதன் மூலம் குறிப்பிட்ட ஒரு மனிதரிலுள்ள நோய்கள், இனிமேல் எதிர்காலத்தில் வரக்கூடிய நோய்கள் பற்றிக் கூட கூறிவிடலாம்.

சென்ற ஆண்டு அதிகமாகப் பேசப்பட்ட இன்னொரு விடயம்தான் ஒரு ஆதிகாலத்து மனிதனின் உடலைக் கண்டு பிடித்ததாகும். கென்ய நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும், பிரான்சு நாட்டு ஆராய்ச்சியாளர்களும் சேர்ந்து ஆறு மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு மனிதனின் உடலை கென்யாவிலுள்ள Great Rift Valley என்னுமிடத்தில் கண்டெடுத்தார்கள். இதில் இருந்து, இந்த உடலைக் கொண்டிருந்தவர் நன்கு விருத்தி அடைந்த கால்களைக் கொண்டவராகவும், எழுந்து நேராக நிற்கக்கூடியவராகவும் இருந்திருக்கின்றார்.

சென்ற வருடம் பிரபலமான இன்னொரு செய்தி செவ்வாய்க் கிரகத்தில் நீர் இருக்கும் / இருந்த விடயம் பற்றியதாகும். பெறப்பட்ட இரு விம்பங்களில் இருந்து ஒரு காலத்தில் நிச்சயமாக செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருந்திருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால் NASA விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஜூன் மாதத்தில் விடுத்த அறிக்கையின்படி அங்கு தற்போதும் கூட நீர் இருப்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கும் என கூறப்படுகின்றது. அங்கு நீர் இருக்குமானால் எதிர்கால விண்வெளி பயணங்கள் இலகுவாக்கப்படும். நீர் இருக்குமானால் அங்கு விண்வெளிக் கலத்தில் சென்று, மீண்டும் திரும்பி வருவதற்கு எரிபொருளை தயாரித்துக் கொள்ளலாம். அதைவிட வேறு கிரகங்களுக்கான பயணங்களையும் செவ்வாய்க் கிரகத்தில் தங்கி, மீண்டும் தொடரலாம். இது மாத்திரமல்ல நீர் இருக்குமானால் வேறு உயிரினங்கள் அங்கு வாழவும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

கடந்த ஆண்டின் இன்னுமொரு சுவாரசியமான விடயம் மின்கணணி சம்பந்தப்பட்டது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஒரு Software இன் மூலம் மின்கணணியில் எழுதப்படும் வசனங்கள் ஒலிவடிவில் மாற்றப்படக் கூடியதாகவிருந்தது. கடந்த வருடம் இதற்க ஒரு படி மேலே சென்று ஒரு Animation Software தயாரிக்கப்பட்டது. Animation எனப்படுவது மின்கணணியில் விம்பங்களை அசையச் செய்யும் தொழில்நுட்பமாகும். சென்ற வருடம் ஒரு விசேட அனிமேஷன் Software தயாரிக்கப்பட்டது. இதன் மூலம் ஒரு அழகான பெண்ணின் விம்பம் ஒன்றை மின்கணணியில் தயாரித்து, அந்தப் பெண்ணின் முகத்தையும் உதட்டையும் அவர் செய்தி வாசிக்கும் போது, அந்த சொற்களுக்கேற்றவாறு அசையச் செய்தார்கள். இதைப் பார்க்கும் போது உண்மையாக ஒருவர் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பதைப் போல இருந்தது. இதைப் பல்வேறு தொலைக்காட்சிச் செய்திகளிலும் சென்ற வருடம் காட்டினார்கள். இதைப் பார்க்கும் போது ஆட்கள் இல்லாமலேயே எதிர்காலத்தில் தொலைக்காட்சி சேவையை நடத்திவிடுவார்கள் போல் உள்ளது. இப்படியாக மின்கணணியில் உருவாக்கப்பட்ட பெண்மணிக்கு Ananova எனப் பெயரிட்டார்கள். இந்தப் பெண்மணியின் தலைமயிர் பச்சைநிறமாகவும், கண்களும் பச்சை நிறமாகவும் இருந்தது.


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

புதிய இடத்தில்

☎: (416) 267-0408

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 115**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | ■ | 3 |
| | ■ | | ■ | ■ | 4 | | |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| 5 | | | | ■ | 6 | | ■ |
| ■ | ■ | ■ | ■ | ■ | 7 | 8 | |
| 9 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| | | | 10 | | 11 | ■ | 12 |

**இடமிருந்து - வலம்**

1. இந்தியா அண்மையில் (மார்கழி 2000) நாடு கடத்திய அஹிம்சாவாதி
4. குளிர்ச்சி 5. தென்னையின் இளங்காய்
6. பண்டிதன் 7. உதவி செய்
9. தமிழ் ஈழத்தில் தாராளமாக இருக்கும் மரம் ஒன்று
11. இக் கிழங்கில் தயாரிக்கப்படும் களிக்கு ஒரு தனி மதிப்பு உண்டு

**மேலிருந்து கீழ்**

1. ஓலையின் ஒரு பகுதி 2. கூலி
3. சாந்தி 8. சூடாகு (கீழ்-மேல்)
9. சிறுவரின் 'எட்டுக் கோடு' விளையாட்டில் கோட்டில் மிதித்தலை இவ்வாறு கூறுவர்
10. சாறு பிழியப்பட்டு எஞ்சியுள்ள பகுதி
11. போர் முனையில் கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இவன்
12. உணவு

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JANUARY 27, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வா | ழை | ச் | சே | னை | ■ | சு | தூ |
| ன | ■ | ■ | வ | ■ | ஆ | ■ | ண் |
| வி | நி | யோ | க | ம் | ■ | மு | டி |
| ல் | ■ | ■ | ன் | ■ | ந | க | ல் |
| ■ | ம் | ■ | ■ | ஓ | ட | ம் | ■ |
| ப | த | க் | க | ம் | ■ | ■ | சி |
| ■ | ட | ■ | ■ | ■ | பா | வா | டை |
| ■ | ஒள | வி | ய | ம் | ■ | சி | க |

**11தில் வெற்றி பெற்றோர்**

1) Mrs. Manga, Willodale, Ont.
2) K. Nimalan, Toronto, Ont.

*ஆட்டிறச்சி வியாபாரத்தில் தமிழ்மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*





**DAYCARE**



★ 3 மாதம் - 6 வயதுச் சிறுவர்களுக்குச் சிறந்த பராமரிப்பு.
★ காலை 7.00 மணி - மாலை 6.00 மணிவரை.
★ இருநேர உணவும், பிற்பகல் சிற்றுண்டியும் வழங்கப்படும்.
★ வயதுக்கேற்ப கணிதம், தமிழ், ஆங்கிலம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிக்கப்படும்
★ விளையாடத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன.

★ கட்டணம்:-
Week - $ 40.00
Day - $ 10.00
1 Hr - $ 1.50



தொடர்புகளுக்கு: 416-335-5578
McCowan / Sheppard
#704, 360 Pitfield Rd.
Scarborough, ON.


மருத்துவத் துறையிலும் முக்கிய ஒரு கண்டுபிடிப்பு சென்ற வருடம் நிகழ்ந்தது. பிரித்தானியாவிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் Stem Cells எனப்படும், ஆரம்ப வளர்ச்சி நிலையிலுள்ள கலங்களை உடலின் ஒரு பகுதியிலிருந்து, வேறு ஒரு பகுதிக்கு எடுத்துச் சென்று அங்கு அதை அந்த உறுப்புக் கலங்களாக வளர்க்கக் கூடியதற்கான தொழில்நுட்ப முறையைக் கண்டறிந்தார்கள். இது வேறு உறுப்புகளை வளர்க்கக் கூடிய வல்லமையைக் கொடுக்கின்றது. அது மாத்திரமல்ல Neuron எனப்படும் உணர்வு கடத்தும் அமைப்புக் கலங்களையும் உருவாக்கக் கூடியதாகவிருப்பதால் Alzheimer's Parkinson's வருத்தங்களையும் குணமாக்கக் கூடியதாக வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல நாடுகளின் கூட்டு முயற்சியால் விருத்தியாக்க்ப்படும் ISS எனப்படும் சர்வதேச விண்வெளி நிலையம் 2000 ஆம் ஆண்டில் நன்கு விருத்தியாக்கப்பட்டது. கட்டிடவமைப்பு வேலைக்கும் பேணிக்காக்கும் வேலைகளுக்கும் ஆறு விண்வெளிப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. நொவெம்பர் மாதத்தில் அனுப்பப்பட்ட விண்வெளி வீரர்கள் தற்போது அங்கு வசித்து வருகின்றார்கள். எதிர்காலத்தில் இப்படியாக ஒரு ஹோட்டல் ஒன்றையும் நிர்மாணிக்க ஒரு தனியார் நிறுவனம் முயற்சிக்கின்றது.

இவற்றைவிட பல்வேறு மருத்துவ, தொழில்நுட்ப விருத்திகள் ஏற்பட்டாலும், மேற்கூறப்பட்டவை அதிகமாகப் பேசப்பட்டவையாகும்.


"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## 2000 அல்லது 2001 வாகனமா?



பலரும் 2000 ஆண்டு வாகனத்தை தேடித்திரிந்து வாங்குவதை காணக்கூடியதாக உள்ளது. 2000 ஆண்டு வாகனத்தை வாங்குவதன் மூலம் பெரியளவில் சேமிக்க முடியும் என்பது இவர்களின் எண்ணம். நீங்கள் வாங்குவது GM, CHRYSLER, FORD ஆக இருப்பின் ஆம் உங்களின் சேமிப்பு பெரியளவில் இருக்கத்தான் செய்யும். அதேவேளை HONDA அல்லது TOYATA இருக்கும் இடத்து உங்களின் சேமிப்பானது மிக சிறியதாகத்தான் இருக்கும் என்பதை புரிவது நல்லம்.

### WINTER இல் AIR முக்கியமா?

Winter காலத்தில் நாம் கட்டாயம் நமது வாகனத்தின் Tire இல் உள்ள Air ஐ சரி பார்ப்பது சிறந்தது என்பேன். முக்கியமாக நாம் வெப்ப காலத்தில் Air ஐ செக் பண்ணி சரிசெய்து பார்த்திருப்போம். குளிர் காலம் வந்ததும் அந்த Tire இல் உள்ள Air குளிர் காரணமாக அமுக்கம் குறைந்து காணப்படும். வருடத்தில் இரண்டு தரம் கட்டாயம் எமது வாகனத்தின் Air ஐ செக்பண்ணுவது நல்லது. Winter இலும் Summer இலும் அதைச் செய்வது நல்லது.

### WINDSHELD WATER = WATER?

சிலர் தமது வாகனங்களுக்கு windsheld water விடுவதற்கு பதிலாக தண்ணீரை பாவிப்பர். நாம் இலங்கையில் இருந்தால் தாராளமாக தண்ணீரை பாவிக்கலாம். இங்கு winter காலத்தில் தண்ணீர் பனிக்கட்டியாக மாறி பெரிய அளவில் சேதத்தை விளைவிக்கும். தண்ணீரை பாவிக்காது விடுவது சிறந்தது.

சோதீஸ் (416) 704-1179


# கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494


## திருமொழிகள்

* மக்கள் பால் ஒற்றுமையிருந்தால் உயிரிரக்கம் எங்கும் பரவும்.
* பல்வேறு உடல்களிலும் நின்று விளங்கும் உயிர் ஒன்றேயாதலின் அனைத்துயிரையும் ஒன்றெனக் கொள்ள வேண்டும்.
* உலகில் மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூவாசைகளையும் போக்க முயற்சி செய்தல் வேண்டும்.
* இறைவனை உயிர்கள் அடையாத வண்ணம் தடை செய்வன உலக இன்பங்களே. உலகியல் இன்பங்களை வெறுத்து, அழிவிலா இன்பம் அடைய ஆண்டவன் அருள் வாழ்வைக் கைக் கொள்ள வேண்டும்.


# THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
(CET)

சீலன். A (சிவா)

TEL: (416) 451-0271 PAGER: (416) 980-9836

email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு $400 இலவசம்



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

TWO YEARS DIPLOMA ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே!

# OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(43)

வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்தும் போது தண்டனை ரிக்கற் பெற்றவர்கள் அக் குற்ற சாட்டு நீதிமன்றத்திற்கு செல்லும் போது தம்மை பாதுகாத்து தம் பக்கம் உள்ள நியாயங்களையும், சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி வழக்கினை முன் எடுப்பது எப்படி என்ற விடயத்தினை கடந்த அத்தியாயங்களில் பார்த்தோம்.

இறுதியாக வந்த அத்தியாயத்தில் முதல் சந்தர்ப்பத்திலேயே வழக்கில் இருந்து தாங்களாகவே இலகுவான முறையில் நியாயப்படுத்தி தப்பித்து கொள்ளும் வழி முறையினை பற்றி அதன் மூன்று நிலைப்பாடுகளில் நின்று வாதாடுவது பற்றி ஆய்வு செய்தோம்.

இம் முறை வழக்கு பூரணமாக விசாரணைக்கு எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் எப்படி முன் எடுப்பது என்பது பற்றி பார்ப்போம்.

அரசதரப்பு வழக்கு தொடுநர் தாம் குற்றத்தினை ஏற்றுக் கொள்ளவில்லையானால் விசாரணையினை ஆரம்பிப்பார். வீதி விபத்தில் தங்களுக்கு எதிரான குற்ற சாட்டினை நிரூபிப்பதற்கு வேண்டிய ஆதார பூர்வமான சாட்சியங்கள் சாட்சி கூண்டில் ஏறி சாட்சியங்களை வழங்குவார்கள்.

[ சாட்சியம் வழங்க போகின்றவர்கள் எவரும் பைபிள் மீது கை தொட்டு, “நாம் சொல்வது எல்லாம் உண்மை. உண்மையினை தவிர வேறு ஒன்றும் இல்லை” என சத்திய பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டியது பாரம்பரியமாக சகல நீதிமன்றங்களில் உள்ள சகல வழக்குகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்களாகும். இதற்கு மறுப்பவர்கள் குற்றவியல் சட்டத்தின் கீழ் [CRIMINAL LAW] குற்றவாளிகளாக கருதப்படுவார்கள்.]

அரச வழக்கு தொடுநர் சாட்சியங்களை கேள்விகளாக கேட்டு, கேட்டு குற்ற சாட்டினை நிரூபிப்பதற்கான வாக்கு மூலங்களை பெற்று கொள்வார். சாட்சியமாக சமூகம் அளிப்பவர் பொலீஸ் உத்தியோகத்தராக இருந்தால் குற்றம் தொடர்பாக அவரது பதிவேட்டில் பதிவாகியுள்ள குறிப்புகளை அடிப்படையாக வைத்து கேள்விகளை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கேட்டு விடயங்களை வெளியே கொண்டு வருவார். சில நேரங்களில் சாட்சி ஒருவர் நினைவில்லாத விடயங்களை நன்றாக நேரம் எடுத்து யோசித்து, சிந்தித்து தமது வாக்கு மூலங்களை வழங்குவதற்கும் நீதிமன்ற அனுமதியுண்டு.

இதே நேரம் குற்றம் சாட்டப்பட்டு இருக்கும் தாங்கள் சாட்சியம் தொடர்பான முரண்பாடுகளை உடனுக்குடன் குறித்து வைத்து கொள்ளல் வேண்டும்.

சாட்சிகளின் வாக்கு மூலங்கள் யாவும் முடிந்தவுடன் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தாங்களே சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து முரண்பாடுகளை நிரூபிப்பதற்கு சந்தர்ப்பம் தரப்படும்.

[மொழி என்பது இதற்கு எல்லாம் ஒரு தடையல்ல.
வழக்கறிஞரோ அல்லது நீதிமன்ற முகவர் எவருமே தேவையில்லை. நீதிமன்றம் தமிழ் மொழி பெயர்ப்பாளரின் உதவியுடன் சகல விடயங்களையும் தாங்களே மேற்கொள்ளலாம் என்பது இங்கு தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். ஆங்கிலம் ஓரளவு தெரிந்தவர்கள் கூட தம்முள் ஏற்படும் ஒரு பதட்ட நிலைமையினை தடுக்க மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் தாய் மொழியில் குறுக்கு விசாரணைகளை மேற்கொள்வது சிறப்பாக இருக்கும். ]

“குறுக்கு விசாரணை” என்பது நேரடி விசாரணையிலிருந்து முற்றாக மாறுபட்டதாகும். இக் குறுக்கு விசாரணையிலும், நேரடி விசாரணையிலும் சில சட்ட நீதியான வரையறைகள் உண்டு. குறிப்பிடப்பட்ட குற்றசாட்டு, அக் குற்றசாட்டு தொடர்பான வழக்கு வழக்கு தவிர்ந்த அல்லது அதற்கு அப்பால் வாத, பிரதி வாதங்கள் என்பது போகாது விசாரணைகளும் குறுக்கு விசாரணைகளும் முன் எடுத்து செல்ல வேண்டும் என்பது மரபு ரீதியான நீதிமன்ற வழமையாகும். அதாவது பிரச்சனை என்பது சம்பந்தப்பட்ட தலைப்பினுள் மட்டுமே அலசி ஆராயப்படல் வேண்டும்.

நேரடி விசாரணை என்பது நடந்த சம்பவத்தில் வாக்கு மூலத்தினை பெறுகின்றார்கள்.

“குறுக்கு விசாரணை” என்றால் என்ன என்பதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் — (416) 321–0999

(Professional Licensed Instructor In Car & Class Room)


இப்போது

மொட்டையிலும் மயிர் புடுங்கலாம்



இங்கு குளிர்தேசமும், வெந்நீர் முழுக்குமே (ஷவர்) கூந்தல் உதிர்வுக்குப் பிரதான காரணமாகிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஒரு நம்பகமான வழியுண்டு. சபோனாவின் எவமாட்டின் கூந்தல் உதிர்வைத் தடுத்து மீண்டும் வளரச் செய்வதுடன், பொடுகு, இளநரை, செம்படை, முடி அடர்த்தியின்மை போன்ற அனைத்தையும் நிவர்த்தி செய்கிறது. இது முற்றிலும் இயற்கை மூலிகைகளினால் மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

**SABONA**

*& GIFT*

(416) 264-8787 (416) 269-8151

2602 B Eglinton Ave. East, Scarborough

www.tamilclub.com/sabona sabona@home.com



யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக்குறிப்பு கணித்தல்
- பலன் பார்த்தல்

☎: (416) 299-8361



தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

**BREAD MASTER BAKERY**

பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



ரோஸ் பாண் கிடைக்கும்

பாண், பணிஸ், ரோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

3 for 0.99¢

வாரத்தில் 7 நாட்களும்

**31 TAPSCOTT ROAD, UNIT #B3**


LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

**TEL: (416) 299-5083**

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 04

*-Dr. N. S. Moorthy Ph.D*



சென்ற இதழில் மதுவுக்கு அடிமை யானவர்களைப் பற்றிப் பார்த்தோம். ஆரம்பத்தில் சிறுகச் சிறுக ஆரம்பித்து நாளடைவில் மது இவர்களை விழுங்க ஆரம்பித்து விடும். இந்நிலை உடலிலும் மனதிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். உடல் நலிவுறுதல், இரத்தத்தில் குளுக்கோஸ் குறைதல் (Hypoglycaemia) விற்றமின் B1,B2,B3 ஆகியன குறைவுபடுவதால் நரம்புத் தளர்ச்சி, வாயிலும், குடலிலும் புண்கள் ஆகியன பொதுவாகக் காணப்படும் நிலைகளாகும். உணவில் அதிகமான புரதச்சத்தைச் சேர்ந்துக் கொள்வதுடன் மேற்குறிப்பிட்ட விற்றமின்களையும் உடகொள்வது சிகிச்சைக்கு மேலும் உதவும் கபையின் (caffeine) சேர்ந்த பொருட்கள் பாதிப்பை ஏற்படுத்துமாதலால் கோப்பி, தேனீர், சொக்லேட், கொக்கோ கோலா போன்ற பானங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. மருத்துவ ஆராய்சியாளர்களின் கருத்துப் படி மது தயாரிக்க உதவும் மூலப் பொருட்களான சோளம், கோதுமை, பார்லி, மால்ட் போன்ற உணவு வகைகளையும் சிகிகைக் காலத்தில் உண்ணுவது உகந்ததல்ல.

மனம்விட்டு அளவளாவுதல், மனோதத்துவ சிகிச்சை போன்றவையும் மதுவின் பிடியிலிருந்து விடுபட்டவரைத் தொடர்ந்து நல்ல நிலையில் வைத்திருக்க உதவக்கூடியனவாகும். மதுவையோ, புகைத்தலையோ கைவிட மாத்திரைகளையும் மருந்துகளையும் பாவிக்க ஆரம்பித்தால் நாளடைவில் அவற்றிக்கும் பழகி அடிமையாக வேண்டி வரலாம். அது மட்டுமன்றி அவற்றின் தேவையற்ற பக்க விளைவுகளுக்கும் இடமாகவேண்டி வரும். எனவே தான் இவற்றை விட சில குறுகிய காலத்திற்கு மட்டுமே செய்யக்கூடிய அக்குபஞ்சர் சிகிச்சை சிறந்ததாக கணிக்கப்படுகிறது.



போதை வஸ்துக்களுக்கு அடிமையானவர்களைப் பொறுத்த வரை சிகிச்சை ஒரு மருத்துவமனைச் சுற்றாடலில் அளிக்கப்படுவதே சிறந்தது. ஏனெனில் நோயாளியின் நிலையை அடிக்கடி கணித்துக் கொள்ளவும் பழக்கத்தைக் கைவிடும் போது ஏற்படும் பல்வேறுபட்ட பக்க விளைவுகளை கவனத்தில் எடுத்து உடனடி சிகிச்சை அளிக்கவும் உகந்ததாக அமையும். ஒவ்வொரு போதைவஸ்துவும் உடலிலும் மனதிலும் வெவ்வேறு விதமாகச் செயல்படுகின்றன. சில பொருட்கள் இன்ப நிலை போன்ற மயக்கத்தையும், சில போதையுடன் வெறியையும் சேர்த்துக் கொடுக்கக் கூடியனவாகவும் அமைகின்றன. அத்துடன் ஊசிமூலம் சேர்த்துக் கொடுக்கப்படும் போதை மருந்துகள் எயிட்ஸ் ஈரல் தாபிதம் போன்ற பயங்கர தொற்று நோய்கள் ஏற்படவும் இடமளிக்கிறது. இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள மேற்படி இரண்டு நோய்களும் பாலியல் உறவுக்கு அடுத்த படியாக போதை மருந்து ஊசிகளைப் பாவிப்பதனலாயே பரவியுள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும் இக் கொடிய நோய் பரவி வருவது எதிர்கால சமுதாய அமைப்புக்கு அபாயச் சங்காக உள்ளது.

இப்பழக்கத்திலிருந்து விடுபடுவது மிகவும் இலகுவான காரியமல்ல. இது மூளையையும் நரம்பு மண்டலத்தையும் அதன் மூலம் உள்ளுறுப்புகளையும் அதிகம் பாதிப்புறச் செய்வதால் மனம் விரும்பினாலும் உடலும் உடல் விரும்பினாலும் மனமும் ஒத்துப்போகாது ஓர் குழப்ப நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே தான் போதை மருந்துகளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை செய்யும் போது இவ்விடயங்களைக் கவனத்தில் எடுப்பது அவசியம். அடிமைப் பழக்கத்தின் காரணமாக அவர்கள் குழந்தைகள் ஒத்த நிலையையும் அடையலாம். அக்குபஞ்சர் சிகிச்சையுடன் மனோதாத்துவ மருத்துவமும் சேர்த்துச் செய்வதன் மூலம் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். பழக்கத்தை விடைத்தெறிவதில் ஏனைய சிகிச்சைகளை விட முன்னணி வகிப்பது அக்குபஞ்சர் சிகிச்சை முறையாகும். அத்துடன் உடலுக்கான போசாக்குகளையும் கணக்கில் எடுக்கவேண்டும். கனியுப்புக்கள் (Multi minerals) பல விட்டமின்கள் இணைந்த மாத்திரைகள் விட்டமின் B அதிகளவு (Niaciamide 500mg Pyridoxine 100mg) தினமும் சில வாரங்களுக்கு கொடுக்க வேண்டும். அத்துடன் விட்டமின் C உம் அவசியமாகும்.

ஆரம்ப நிலையில் தினமும் சிகிச்சை அளிக்க வேண்டும். பின்வாங்கல் நிலைமை தீவிரமாயிருந்தால் தினமிருவேளை தேவைப்படலாம். பின்னர் படிப்படியாக வாரத்திற்கு மூன்று தடவை பின் இரண்டு தடவைகளாக்கி வாரமொருமுறை சிகிச்சை சில மாதங்களுக்கு அளிக்க வேண்டும். இம்முறையின் மூலம் நீண்ட நாள் பழக்க நோயாளிகள் சிறந்த பலனைப் பெறலாம். அத்துடன் காற்றோட்டமான வெளியில் உலாவிவரவும் நோயாளியை உற்சாகப்படுத்த வேண்டும்.

மேற்கூறிய அதே முறையின் மூலம் அதிக உணவு உண்ணும்


Safety Truck

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

We accept Welfare & Unemployment Insurance




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

(13 Years Canadian Experience with Trucks)

Tel: (905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

காப்புறுது / இன்சூரன்ஸ்

எங்களில் தங்கியுள்ளவர்களிற்கான நியாயமான பாதுகாப்பு

LIFE INSURANCE

| Age | $100,00 m/f | $250,000 m/f | $500,000 m/f |
|---|---|---|---|
| 30 | 11.34/9.90 | 17.50/15.00 | 29.25/23.85 |
| 35 | 12,06/10.17 | 18.68/16.43 | 31.50/26.55 |
| 40 | 13.14/12.24 | 22.28/20.00 | 40.00/32.40 |
| 45 | 17.46/14.22 | 30.15/24.98 | 53.35/44.10 |
| 50 | 23.49/17.01 | 42.50/32.18 | 80.00/59.40 |
| 60 | 50.67/30.00 | 92.50/72.00 | 180.00/138.15 |
| 65 | 79.20/54.09 | 175.00/115.45 | 345.00/209.17 |

தொடர்புகளுக்கு: Paul Ram Narayan ☎: (416) 414-2202

Life & Investment Broker


நம் நாட்டுப்பெண்கள் பலர் மேலை நாடுகளுக்கு வந்ததும் உடல் பருத்து அவஸ்தைப்படுவதை அவதானிக்கலாம். சூழ்நிலை மாற்றம், உணவு மாற்றம் இதனால் உடலின் சுரப்புக்களான ஓமோன்களின் சமநிலை மாறுபடுவதாலும் (Hormonal Imbalance) இந்நிலை ஏற்படுகிறது. அதிகளவு எண்ணை, கொழுப்புப் பொருட்கள், சாக்லேட், ஐஸ்கிரீம் போன்ற இனிப்பு பொருட்களை உண்ணுதல் உடலுழைப்புக் குறைவு , உடற்பயிற்சி செய்யாமை, கர்ப்பத்தடை மருந்துகளைப் பாவித்தல் போன்றவையும் உடல் பருத்தலுக்குக் காரணமாக அமையும். சிறுகச் சிறுக அடிக்கடி உணவு உண்ணுதல் ஓர் கொடிய பழக்கமாகும். இதை மருந்துகள் மூலம் கட்டுப்படுத்துவது கடினமாகும். மேற்கூறிய சகல நிலைகளுக்கும் சிறந்த உகந்த சிகிச்சையாக அமைவது அக்குபஞ்சர் சிகிச்சையாகும். இது மனதைக் கட்டுப்படுத்தி அடிக்கடி உண்ணும் பழக்கத்தை குறைக்கின்றது. அத்துடன் ஓமோன் மனநிலை மாறுபாட்டையும் சரிபடுத்தி உடலின் செயல்பாடுகள் சரிவர நடக்க உதவி புரிகிறது.

# விளையாட்டுத் தகவல்கள் (68)

-எஸ். கணேஷ்



## மில்லேனியம் வருடத்தின் கிரிகெட் டெஸ்ட் ஆட்ட முடிவுகள்

உலக தமிழோசையின் சென்ற இதழில் கிரிகெட் ஆட்டங்களில் 2000 ஆண்டின் ஒரு நாள் சர்வதேச போட்டிகளின் முடிவுகளை பார்த்தோம். இவ் இதழில் டெஸ்ட் ஆட்ட முடிவுகளை பார்ப்போம். ஒரு நாள் போட்டிகளில் இலங்கை 2000 ஆண்டின் மொத்த பெறு பேறுகளில் முதல் இடத்தில் உள்ளது. ஆனால் டெஸ்ட் ஆட்டப் போட்டிகளில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. ஆனால் TEST ஆட்டப் போட்டிகளில் பந்து வீச்சாளர்கள் வரிசையில் தமிழ் வீரன் முரளிதரன் முதல் இடத்தில் உள்ளார். உகலகத்திலேயே தலை சிறந்த OFF SPINNER என வருணிக்கப்படும் முரளிதரன் இவற்றிக்கெல்லாம் சிகரம் வைக்குமாற் போல் டிசம்பர் 30 ஆம் திகதி SOUTH AFRICA இல் தனது 300 வது விக்கெட்டை கைப்பற்றியுள்ளார். இவர் கைப்பற்றிய 300ஆவது விக்கெட் SOUTH AFRICAN கப்டன் SHAUN POLLOCK இனுடையதாகும். 28 வயதுடைய முரளிதரன் தனது வாழ்நாளின் இலட்சியம் 500ஆவது விக்கெட்டை கைப்பற்றுவதாகும் என குறிப்பிட்டுள்ளார். தற்போது உலகத்தில் WORLD RECORD வைத்திருப்பவர் மேற்குஇந்திய அணியை சேர்ந்த COURTNEY WALSH ஆகும். இவர் 492 விக்வெட்டுகளை கைப்பற்றியுள்ளார். முரளிதரன் இரண்டாவது LOWEST ஆட்டங்களில் தனது 300 வது விக்கெட்டுகளை 58 TEST போட்டிகளில் கைப்பற்றியுள்ளார். முதலாவது இடத்தில் LOWEST ஆட்டங்களில் (56) அவுஸ்திரேலியாவை சேர்ந்த DENNIS LILLEE 300 வது விக்கெட்டைக் கைப்பற்றியிருக்கிறார். உலகத்திலேயே 300 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய 17ஆவது வீரன் முரளிதரன் ஆகும்.

1992 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை அணிக்கு விளையாடி வரும் முரளிதரனை தவிர வேறு எவருமே இலங்கை அணியில் இருந்து 150 விக்கெட்டுகளை கூட தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முரளிதரனின் அதிபெறுமதியான பெறுபேறு 1998 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக ஒரு இனிங்ஸில் 65 ஓட்டங்களை கொடுத்து 9 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அதே ஆட்டத்தில் இரண்டாவது இனிங்சில் 7 விக்கெட்டுகளை கைப்பற்றி மொத்தமாக ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி உலகத்தில் 5 வது வீரர் ஆக இச் சாதனையை நிகழ்த்தியுள்ளார். அதேபோல் ஒரு நாள் ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளை 30 ஓட்டங்களில் கைப்பெற்றி முதலாவது உலக சாதனையும் படைத்து உள்ளார்.டெஸ்ட் ஆட்டத்தில் 300 விக்கெட்டுகளையும் ஒருநாள் ஆட்டங்களில் 211 விக்கெட்டுகளையும் இது வரை கைப்பற்றியுள்ளார். 10 TEST ஆட்டங்களில் 2000 வருடத்தில் 75 விக்கெட்டுகளை கைப்பற்றி OUTSTANDING BOWLER OF THE YEAR என்ற விருது முரளிதரன் கைப்பற்றியுள்ளார்.

2000 வருடத்திற்கான TEST ஆட்டப் போட்டிகளில் அவுஸ்திரேலியா முதலிடத்தை பெறுகின்றது. ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் அவுஸ்திரேலியா இரண்டாம் இடத்தை பெறுகின்றது.

TEST ஆட்ட பெறுபேறுகள் வருடம் 2000



| நாடு | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | வெற்றிதோல்வி இன்மை | விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. அவுஸ்திரேலியா | 8 | 8 | _ | _ | 100% |
| 2. சவுத் ஆபிரிக்கா | 11 | 6 | 2 | 3 | 54% |
| 3. இங்கிலாந்து | 12 | 6 | 2 | 4 | 50% |
| 4. இந்தியா | 6 | 2 | 3 | 1 | 33% |
| 5. ஸ்ரீலங்கா | 10 | 3 | 4 | 3 | 30% |
| 6. மேற்குஇந்திய தீவுகள் | 14 | 4 | 7 | 3 | 28% |
| 7. பாகிஸ்தான் | 12 | 3 | 4 | 5 | 25% |
| 8. நியூசிலாந்து | 9 | 2 | 5 | 2 | 22% |
| 9. சிம்பாவே | 9 | 0 | 6 | 3 | 0% |

2000 வருடத்தில் TEST போட்டிகளில் துடுப்பாட்டத்தில் அதிகூடிய ஓட்டங்கள் எடுத்த முதல் 10 வீரர்கள்!

| பெயர் | நாடு | ஆட்டங்கள் | இனிங்ஸ் | ஓட்டங்கள் | அதிகூடிய ஓட்டம் | 100 |
|---|---|---|---|---|---|---|
| 1. INZAMAM-UL HAG | பாகிஸ்தான் | 12 | 19 | 1090 | 142 | 4 |
| 2. A. FLOWER | சிம்பாவே | 9 | 16 | 1045 | 232 | 3 |
| 3. ATHERTON | இங்கிலாந்து | 12 | 21 | 990 | 136 | 5 |
| 4. YOUSUF YOUHANA | பாகிஸ்தான் | 12 | 18 | 839 | 124 | 4 |
| 5. KALLIS | ச.ஆபிரிக்கா | 11 | 18 | 780 | 160 | 2 |
| 6.ஜெயவர்த்தனா | ஸ்ரீலங்கா | 10 | 18 | 740 | 167 | 2 |
| 7. அத்தபத்து | ஸ்ரீலங்கா | 10 | 18 | 732 | 207 | 2 |
| 8. ஜெயசூரியா | ஸ்ரீலங்கா | 10 | 18 | 722 | 188 | 2 |
| 9. KRISTEN | சவுத்ஆபிரிக்கா | 11 | 18 | 712 | 180 | 2 |
| 10. HINDS | மேற்கிந்தியதீவுகள் | 13 | 23 | 687 | 165 | 1 |


Tel: (416) 335-4070
NEW Technology
Security and Sound Inc.

Fax: (416) 335-9936
உங்கள் வாகனங்களுக்குத் தேவையான
WINTER SPECIAL OFFER...
REMOTE STARTER $74.99
AND
ANOTHER SPECIAL
AVITAL ALARM WITH STARTER $74.99
NOW $399.99 (1/4 Mile Range)
CLIFFORD
The Science Of Security
AVITAL
Vehicle security
K-9
CAR ALARAM

VIPER
toucan INDUSTRIES. INC.
Pioneer
AUTO SECURITY COMPUSTAR

Team EARTHQUAKE Born in the U.S.A.
PRESTIGE
We also do any Electrical work
Audiobahn
நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் பொருத்திக்கொள்ளவும் நாடுங்கள்.


Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3


## இலவச பிரசுரம்

ஒவ்வொரு மாதங்களிலும் உங்களால் நடாத்த இருக்கும் நிகழ்ச்சியினையும் எங்களிற்கு தெரியப்படுத்துவதன் மூலம், வேறு ஒரு அமைப்பு நடாத்த இருக்கும் நிகழ்ச்சிக்குப் போட்டியாக அமைவதைத் தடுக்கலாம்.
தொடர்புகளுக்கு: (416) 282-8059

2000 ஆண்டில் அதிகூடிய கேட்ச்களை (55) பிடித்தவர் மேற்கிந்திய அணியை சேர்ந்த TACOBS ஆவார். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த GILL CHARIST 37 கேட்ச்களை பிடித்து இரண்டாம் இடம் வகிக்கின்றார். 2000 ஆண்டில் மிக குறைந்த பெறுபேறுகளை துடுப்பாட்டத்தில் பெற்றவர்கள் வரிசையில் ஸ்ரீலங்காவை சேர்ந்த கலுவுசானாவையும், சவுத் ஆபிரிக்காவின் முன்ன நாள் கப்டன் ஆன (இடை நிறுத்தப்பட்ட) CRONJE க்கும் அடங்குவர்.

கடந்த சில வாரங்களாக ஸ்ரீலங்கா அணியும் சவுத்ஆபிரிக்க அணியும் ஒருநாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் மோதி வருகின்றது. முதல் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இலங்கை அணி சவுத் ஆபிரிக்காவிடம் தோல்வி கண்டுள்ளது. ஆட்டத்தில் மிகவும் பரிதாபகரமாக இலங்கை அணி இனிங்சால் தோல்வியுற்றுள்ளது. சவுத் ஆபிரிக்காக்கு 2000 ஆண்டில் பலத்த அடி கொடுத்த ஸ்ரீலங்கா அணி 2001 ஆண்டில் பலத்த அடி சவுத் ஆபிரிக்காவிடம் இருந்து திருப்பி வாங்குகின்றது. சவுத் ஆபிரிக்காவை சமாளிக்க முடியாத ஸ்ரீலங்கா அணி அரவிந்த டிசில்வாவை அடுத்து வரும் ஆட்டங்களில் ஆட மீண்டும் ஸ்ரீலங்காவில் இருந்து திருப்பி அழைத்துள்ளது, 2000 வருடத்தில் பல வெற்றிகளை கண்ட ஸ்ரீலங்கா அணிக்கு 2001 வருடம் சோதனைக் களம் போல் தென்படுகின்றது! பொறுத்திருந்து பார்ப்போம்!

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

1983 ஆம் ஆண்டு வெளிவந்த படங்களின் தொடர்ச்சி
இவ் ஆண்டு வெளிவந்த படங்கள் 96 இல் பிரபுவின் படங்களே அதிகமாகக் காணப்பட்டது. பிரபுவின் மொத்தபடங்கள் 10. பிரபு மொத்தமாக 10 படங்கள் நடித்திருந்தபோதும் இவர் நடித்த படங்களில் அனேகமானவை மற்றய பெரும் நடிகர்களுடன் சேர்ந்தே நடித்துள்ளார். 1982 ஆம் ஆண்டு 'சங்கிலி' என்ற படத்தில் அறிமுகமாகிய பிரபு 1983 ஆம் ஆண்டு (2 வது ஆண்டில்) மொத்தமாக 10 படங்களில் நடித்துள்ளார். 1983 ஆம் ஆண்டு பிரபுவின் படங்கள் நீதிபதி, தலைமகன், சூரப்புலி, சந்திப்பு, சுமங்கலி, சூரக்கோட்டை சிங்க குட்டி, ராகங்கள் மாறுவதில்லை, மிருதங்க சக்கரவர்த்தி, வெள்ளை ரோஜா மற்றும் முத்து எங்கள் சொத்து.

[illegible] வருடம் சிவாஜிகணேசன் நடித்து வெளிவந்த தமிழ்ப் படங்கள் 6 ஆகும். முறையே நிதீபதி, இமைகள், சந்திப்பு, சுமங்கலி, மிருதங்கசக்கரவர்த்தி மற்றும் வெள்ளை ரோஜா. சிவாஜியும் பிரபுவும் சேர்ந்து நடித்த படங்கள் 5 ஆகும். "பேசும் படம்" சிவாஜியை இந்த ஆண்டிற்குரிய (1983) சிறந்த நடிகராக தெரிவு செய்தது. வெள்ளை ரோஜா மற்றும் மிருதங்கசக்கரவர்த்தி ஆகிய படங்களின் நடிப்பிற்காக சிறந்த நடிகர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

ரஜினிகாந் நடித்து வெளியான படங்கள் 6 ஆகும். முறையே பாயும்புலி, துடிக்கும் கரங்கள், தாய்வீடு, சிவப்பு சூரியன், அடுத்தவாரிசு மற்றும் தங்க மகன்.
இந்தக் காலத்திலிருந்து ரஜினியின் படங்களின் பெயர்கள், எம். ஜி.ஆரின் படங்களின் பெயர்களைப்போல் கதாநாயகன் (ரஜினி) எடுத்துக்காட்டாக வைத்து வெளிவந்தன.



75 இல் அபூர்வமாக அறிமுகமான ரஜினிகாந்த் இன் ஆரம்ப படங்கள் வெற்றிபெற்றன. 78 இலிருந்து 81 வரையான மூன்று வருடங்கள் ரஜினி வாழ்வில் கசந்த காலமாக இருந்தது. இந்தக் காலத்தில் வெளிவந்த படங்களும், காலத்திற்கேற்ப வெற்றிபெறவில்லை. மீண்டும் 82 [illegible]ல் இருந்து வெற்றிப் படங்கள் வெளிவரத் தொடங்கின.


1983 ஆண்டின் ஆரம்பத்தில் ஏவி
எம் இவர் பாயும் புலி. S. P. முத்துராமன் இயக்கிய இப்படம் ஒரு மகத்தான வெற்றிப்படம்.
விஜயகாந்த் நடித்து வெளிவந்த படங்கள் 3. முறையே
டைரிகல்யாணம், சாட்சி மற்றும் மதுரைசூரன். இவற்றில் சாட்சி 100 நாட்களிற்கு மேலாக ஓடி வெற்றி பெற்றது.
1983 ஆம் ஆண்டு பாரதிராஜா டைரக்ஷன் செய்து வெளிவந்த ஒரே தமிழ்ப்படம் "மண்வாசனை". இந்தப் படம் 275 நாட்களிற்கு மேல் ஓடி சாதனைபடுத்தியது.
பாலசந்தரின் டைரக்ஷனிலும் ஒரு படம் மட்டுமே இவ் ஆண்டு வெளிவந்தது "பொய்க்கால் குதிரை".

# வேலவன் பிலிம்ஸ்

ஆதரவில்

## சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் 3 DVD வழங்கப்படும்.



**சினிமா போட்டி # 4**

1. மனுநீதி படத்தின் இசையமைப்பாளர் பெயர்?
2. 'பாயும்புலி' படத்தில் ரஜினி காந்தின் ஜோடியாக நடிப்பவர் பெயர்?
3. 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தின் கதாநாயகன் நாயகி?

***சினிமாப் போட்டி #3இன் விடைகள்***


1. மாதவன்/ரியாசென்சன் 2. ஹரிகரன்
3. சங்கிலி

***போட்டி #3இல் வெற்றி பெற்றவர்கள்**

1. **துளசி**, Toronto
2. Vathsala S., Scarborough
3. T. Poopalasingam, Scarborough

இதற்குரிய விடைகளை January 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் விலாசத்திற்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.


SUBA
DJ SERVICES
வண்ணக்கோலம்
திருமணம். பூப்புனித நீராட்டு விழா.
அரங்கேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும்
அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.



Pl.Call:(416)431-9451/565-4869



TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
தமிழில் இலவச ஆலோசனை




வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால்
என்ன செய்ய வேண்டும்?
RAVI தகுந்த ஆலோசனை RAVI
உரிய நட்ட ஈடு ⟸ RAVI ⟹ சட்ட உரிமை
விபத்துக்குள்ளானவரின் சம்பள இழப்பீடு
மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள ரவி நடராஜா (12 வருடத்திற்கு மேலான அனுபவம்)
TEL:(416) 245-6555
FAX:(416) 245-7766
2095 Weston Rd. #201 (South of HWY 401)
Toronto, Ont.,M9N 1X7



BALAN APPLIANCES




அனைத்து மின் உபகரணங்களின் திருத்த வேலைகள்



✲ Stove
✲ Washer
✲ Microwave
✲ Dryer
✲ Fridge
✲ Dish Washer

☎: 905-619-3457 Pager: 416-379-1071



## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. ஒரு அணுவின் உட்கருவில் இருக்கும் புரோட்டின்களின் எண்ணிக்கையை எவ்வாறு அழைப்பார்கள்?
   **அணு எண்** (Atomic Number)
2. தைராய்டு சுரப்பி பருத்து வீங்குவது எந்த நோயைக் குறிக்கும்?
   **முன் கழுத்து கழலை நோய்** (Goitre)
3. உலகில் உள்ள பறவைகளில் சக்திவாய்ந்த பறவை எது?
   **ஹப்பி ஈகிள்**
4. கியூபா நாட்டில் எந்தவித அரசாங்கம் ஆட்சி செய்து வருகிறது?
   **கம்யூனிச ஆட்சி**
5. ஒரு சர்வதேச கால்பந்து போட்டி நடைபெறும் கால வரையறை எவ்வளவு நேரமாகும்? **90 நிமிடங்கள்**
6. வறண்ட இடத்திற்கு தக்கவாறு தன்னை வளர்த்து கொள்ளும் தாவரங்களை எவ்வாறு அழைப்பார்கள்?
   **ஸோரோபைட்**
7. மனித உடலில் இரத்தத்தில் இருந்து கழிவுப் பொருட்களை சுத்திகரிக்கும் உறுப்பு எது? **சிறுநீரகம்**


அக்கு பஞ்சர்/சைனீஸ் மெடிசின்
$15 Acupuncture
(அக்குபஞ்சர் 10 நிமிடம்.
Tuina (சைனீஸ் மசாஜ் இலவசம்)
$15 Tuina
25 நிமிடம்
(அத்துடன் 10 நிமிடம் அக்குபஞ்சர் இலசம்)
Every Tuesday
Acupuncture & Chinese Medicine
Clinic of Bejing Union University
The college of traditional Chinese Medicine & Pharmacology (Canada)
Professor
James X. N. Yuan
over 22 years Experience
Every Mon., Wed., Fri, Sat.
Acupuncture ($40) Each time
Tel.: (416) 493-8447
3443 Finch Ave. E. #302, Scarborough, Ont.

# 21 ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
*Computer consultant*



**கணணியும் காலமும்**
**பகுதி 22 இன் தொடர்ச்சி...**

கடந்த இதழில் **Digital Camera** வையும் அதன் பயன்பாடுகளையும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியினை இம் முறை பார்ப்போம். **Digital camera** உடன் கையடக்கமான சில சிறிய **printer** களை பிரபலமான **SONY** போன்ற நிறுவனங்களின் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் ஒரு திருமணத்திற்கு செல்வீர்கள் என்றால் அங்கே **Digital Camera** இல் படத்தை எடுத்து அந்த இடத்திலேயே **print** ஐயும் பாவித்து **print** பண்ணி பார்த்துவிடலாம்.


நீங்கள் அறிந்திருப்பீர்கள் Polaroid Camera. அதாவது படத்தை எடுத்து அந்த இடத்திலேயே Print ஐ பார்க்கக் கூடிய ஒரு சிறப்பம்சம் வாய்ந்த ஒரு கமரா. அது இப்பொழுது மிககுறைந்த உபயோகத்தில் தான் இருக்கின்றது. ஏனென்றால் அதன் விலை அதிகம். அதில் எடுக்கப்படும் படங்கள் மிக நீண்ட நாட்களுக்கு நிலையாக இருப்பதில்லை. இது போன்ற பிரச்சனைகள் அதை நடைமுறையில் பயன்படுத்துவது மிகக் குறைந்துவிட்டது. ஆனால் Digital Camera அப்படியல்ல. இப்படிப்பட்ட எல்லா குறைபாடுகளையும் நிவர்த்தி செய்துதான் இந்த Digital கமராவின் உபயோகம் வந்து கொண்டு இருக்கின்றது.



Digital Camera இன் இன்னுமொரு முக்கியமான உபயோகம் என்னவென்றால்; சாதாரண படச்சுருள் Camera இல் அதிகமாக 36 படங்களை எடுக்கக் கூடிய வசதிகள் இருக்கின்றது. ஆனால் சாதாரண Digital Camera இல் 99 படங்கள் எடுக்ககூடிய Caslo Camera க்களை சிறிய திரையுடன் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்கும் மேல் ஒருபடி உயர்வாக சில Camera க்கள் memory என்று சொல்லக் கூடிய memory chip ஐ வேண்டுமாயின் நேரம் போடலாம் அல்லது எடுத்துக் கொள்ளக்கூடிய நேரத்தில் அதை போடலாம். முதலில் ஒரு memory card ஐப் போட்டு 30 or 40 படத்தை எடுத்துவிட்டு பின்பு அந்த memory card ஐ எடுத்துவிட்டு இன்னுமொரு memory card ஐப் போட்டு இன்னுமொரு 30 அல்லது 40 படங்கள் எடுக்கமுடியும். உங்களிடம் பல memory card கள் இருந்தால் பல படங்கள் எடுத்து குவித்து விடலாம். எல்லாம் சேர்ந்து ஒரு கையடக்க தீப்பெட்டி அளவிலான இடத்தில் அதை நிலைப்படுத்தி விடலாம். பின்பு வீட்டிற்கு வந்து அந்த Digital புகைப்பட Camera ஐ உங்களின் கணணியில் இணைத்து ஒவ்வொரு memory card ஐயும் அதில் போட்டு அதிலிலுள்ள படங்கள் எல்லாவற்றையும் கணணிக்கு எடுத்து வந்து வழமையான வேலைகளை செய்யலாம். இப்படி படங்கள் எடுக்கக் கூடிய எண்ணிக்கைகளும் மிக வசதியாக அமைந்து இருப்பது இந்த Digital Camera இல் ஒரு சிறப்பு அம்சம் என்று சொல்லலாம்.

அடுத்த Digital Camera இன் சிறப்பு அம்சம், Sony நிறுவனத்தினர் ஒரு Digital Camera ஐ வெளியிட்டு இருந்தார்கள். அதில் நேரடியாகவே கணணியில் பயன்படுத்தக் கூடிய floppy disk ஐ உள்ளே போட்டு படத்தை அதில் நேரடியாகவே பதிவு செய்து எடுத்து நீங்கள் பாவிக்கலாம். அப்படியான memory chip உம் தேவையில்லை அல்லது எந்த ஊடகமும் தேவையில்லை. நேரடியாக உங்களது floppy disk இலேயே படங்கள் பதிவு செய்யப்படுகிறது. அந்த floppy disk ஐ உங்களது கணணியில் போட்டு edit செய்வதற்கோ அல்லது வேறு யாருக்கும் E-mail செய்வதற்கோ அல்லது print செய்வதற்கோ பயன்படுத்தலாம்.

அடுத்த புதிய அம்சம் இந்த Digital Camera இல் Still photo அதாவது நிலையான புகைப்படமும் அசையக் கூடிய புகைப்படமும் (moving) still moving இரண்டும் உள்ள Digital Camera கள் இப்பொழுது வெளிவருகிறது. இதில் மிக சிறந்த அம்சம் என்னவென்றால் நீங்கள் பல still படங்களை திருமண விழாவிலோ அல்லது பிறந்ததின விழாவிலோ எடுக்கலாம். அல்லது moving அதாவது cake வெட்டும் போது அப்படியே எடுக்கலாம். இப்படியாக இரண்டும் இணைந்த camera க்கள் இப்பொழுது வருகின்றது. சாதாரண புகைப்பட சுருள் camera க்கள் விடை பெற்று செல்லும் இந்த நேரத்தில் அடுத்து வந்த புதிய கண்டுபிடிப்பான Digital Camera க்கள் இனி வரப்போகின்ற video camera க்களால் விடைபெறப்போகின்றன.



எந்த விதமான video cassette களும் இல்லாமல் memory ஐ வைத்துக் கொண்டே 1 மணி நேர படங்கள் எடுக்கக் கூடிய Digital Camera க்கள வந்திருக்கின்றன. மேலும் இது வளர்ந்து இரண்டு அல்லது மூன்று மணி நேர படங்களை எடுக்கக்கூடிய memory கள் உள்ள Digital video camera க்கள் வரும். அந்த நேரத்தில் சாதாரண video camera க்கள் இருக்கப் போவதில்லை. எல்லாவற்றையும் விட இதில் அசையக் கூடிய பகுதிகள் அதாவது video கமாரா என்றால் அதில் video cassette க்கள் சுற்றுவதற்கு அல்லது tape இயங்கிக் கொண்டு இருப்பதால் பல பிரச்சனைகள் வரும். உதாரணமாக head இல் dust பிடித்து அதை clean பண்ணவேண்டி இருக்கும். ஆனால் இந்த Digital Video Camera இல் அந்தப் பிரச்சனை இல்லை. இந்த Digital Video இல் motor போன்ற அசையக்கூடிய கருவிகள் அதில் இல்லை. இதனால் அதனுடைய வாழ்நாள் அதிகம். Digital கமராக்கள் எமக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும். அதே சமயத்தில் பிரச்சனைகள் வருவதும் மிகக் குறைவா இருக்கும். Video Camera இல் Rewind, Forward பண்ணவேண்டும். இதற்கு நிமிடங்கள் எடுக்கும். ஆனால் Digital Video இல் ஒரு second இல் செய்யக் கூடியதாக இருக்கும். என்னைப் பொறுத்த வரை முழுதிரைப்பட கமராக்கள் கூட முழுமையாக Digital Camera வாக மாறுவதற்கு இன்னும் சில வருடங்கள் எடுக்கும். Internet தொலைத்தொடர்பு மூலம் எழுதக் கூடிய paper கள் சேமிக்கப்படுகின்றன. பல கோடிக்கணக்கான paper கள் அச்சிடுவது தவிர்க்கப்படுகின்றது. அது போலத்தான் இந்த Dgtital Camera வால் பல கோடிக்கணக்கான படச்சுருள்கள் சேமிக்கப்பட போகின்றன.

**SYSTEM PLUS**
www.systemsplus.net
T.P (416) 321 - 5995
இதில் வரும் சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறைறைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி
''உலக தமிழோசை''க்கு நீங்கள் அறியத்தரவும்.
vlambaram.@email.com

**Neelam SILK**

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க



- முகூர்த்தப்பட்டுப் புடவைகள் * பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread work பட்டுப்புடவைகள் * ரிசு சேலைகள
- காஞ்சி 2000 ரிசு சேலைகள் * Emboss Tissue சேலைகள்
- Cut work சேலைகள் * அபூர்வா 2000 cut work

மைசூர் சில்க் சேலைகள், சோனா, மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

**"தமிழர் மத்தியில் தரமான பட்டுப்புடவை மாளிகை"**

**"நீலம் சில்க்"**

TEL: (416) 778-7455 FAX: (416) 778-8484
1453 GERRARD STREET EAST (INDIAN Bazzar)

# விண்வெளி 54

அந்நியர்கள் அறிமுகம்:- தருபவர்:- கனி

UFO, ALIENS, EXTRATERRESTRIALS இவை போன்ற பதங்கள் இன்று பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றில் அடிக்கடி பார்க்கும், கேட்கும் விடயங்கள் ஆகிவிட்டன. இவை உண்மையான விடயங்கள்தான எனச் சிலராலும், வேறு சிலரால் இது வெறும் கற்பனை எனவும் கூறப்படுகிற போதிலும் மிகப் பெரும்பாலானோருக்கு இவை என்னவென்று புரியாத பெரும் புதிராக இருக்கின்றன. ALIENS அதாவது அந்நியர்கள் (பூமியின் அந்நியர்கள்) என்ற தலைப்பின் கீழ் இவை எல்லாவற்றையும் ஆராய்வோம். பல சுவர்சியமான விஞ்ஞான விளக்கங்களை, தகவல்களைக் தரும் இப்பகுதி எமது அறிவியற் சிந்தனைக்கு மிக முக் கியமானதாக இருக்கும். எத்தனையோ ஆய்வாளர்கள் பெரும் பணச்செலவில் பல தகவல்களைத் திரட்டி பலகாலமாகக் கடின முயற்சி செய்து...., தீர்க்கமான முடிவைப் பெறமுடியவில்லை. இந்த UFO, ALIENS என்ற இரண்டு விடயமுமே இன்று வரை மக்களிடையே பெரும் புதிராகவே உள்ளது. சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இந்த ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்க வேண்டும் என ஐயுறும் ஆய்வாளர்கள் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருப்பதை ஒப்புக் கொள்ளுகின்றார்கள் தான்.



யார் இந்த அந்நியர்கள்? எவ்விதம் இந்த எண்ணக்கரு மனிதனுக்குத் தோன்றியது? எந்த அடிப்படையில் இவையெல்லாம் கூறப்பட்டது? ஆராயப்படுகிறது? இவையெல்லாம் இப்பகுதியின் மிகப் பெரிய கேள்விக் குறிகள். பறக்கும் தட்டு எனும் பதம் ஒரு காலத்தில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டது. பின்னர் பறக்கும் தட்டுகளின் வடிவம் வேறுபட "இனம் தெரியாத பறக்கும் பொருட்கள்" (Unidentified Fly in Object) UFO எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த UFO இனம் தெரியாத பறக்கும் பொருட்களைச் செலுத்தி வருபவர்கள் வெளியுலக வாசிகள் அல்லது ALIENS எனும் அந்நியர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டது. இனம் தெரியாத பறக்கும் பொருட்களின் அதாவது UFO க்களின் மர்மம் துலங்கு முன்னரே ALIENS எனும் பதம் மனித இனத்தை பரபரப்படைய வைத்துவிட்டது. மனிதனைப் போன்ற இன்னொரு இனம் பூமி அல்லாத வேறு எங்கேயோ இருக்க முடியுமோ என்ற ஐயப்பாடான எண்ணமே இந்தப் பரபரப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

ஒரு காலத்தில் சூரியனின் மற்றய கோள்களில் குறிப்பாக வெள்ளி, செவ்வாய் என்பவற்றில் உயிரினங்கள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் ஐயுற்றார்கள். ஆனால் இன்று காணப்படும் சூழ்த்திய நிலைகளுக்கு ஏற்ப இக் கிரகங்களில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. இந் நிலையில் விண்வெளி பற்றிய அறிவின் வளர்ச்சி அந்நியர்கள் இருக்கக் கூடிய வாய்ப்பின் சந்தேகத்தை இன்னமும் விரிவுபடுத்தியது.

எமது பிரபஞ்சத்தில் பில்லியன் திரில்லியன்களுக்கு மேலான கலக்சிகள் (GALAXY) உள்ளன. ஒவ்வொரு கலக்சியிலும் கோடான கோடி சூரியன்கள் (நட்சத்திரங்கள்) உள்ளன. எனவே இவ்வளவு பெருந்தொகையான நட்சத்திரங்களையும் சுற்றிக் கொண்டு எண்ணிலடங்காக் கோள்கள் இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கின்றன. இப் பெருந் தொகையான கோள்களில் உலகங்களில் சிலவற்றின் பௌதீக, பூகோள அமைப்பு சூரியன் - பூமி தொகுதி போன்று இருக்கலாம். அப்படி இருக்கும் தொகுதிகளில் உயிரினங்கள் இருக்கலாம். பூமியில் உயிரினங்கள் தோன்றுவதற்கு பல காலங்களுக்கு முன்னரே இது போன்ற உலகம் ஒன்றில் தோன்றிய உயிரினம் ஒன்று (இது ஒரு வேளை மனிதனது சாயலைப் பெற்றிருக்கலாம்) விஞ்ஞான அறிவியலில் மேம்பட்டு பிரபஞ்சத்தை ஆய்வு செய்ய புது உலகங்களைக் கண்டுபிடிக்க தனது விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்ப (STAR TRAK) என்னும் தொலைகாட்சித் தொடர் இந்த அடிப்படைக் கருத்தில் இருந்தே பிறந்தது) அது எமது பூமியை இனம் கண்டிருக்கலாம். அதன் பின்னர் பூமியில் வாழும் எம்மை தமது சக்தி மிக்க விண்கலங்களில் இருந்து நோட்டம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் - இருக்கிறார்கள். காலத்திற்குக் காலம் பூமியின் மேற்பரப்பிற்கு அண்மையில் வரும் இவர்களது விண்கலங்களே எமக்கு UFO க்காக தெரிகின்றன. மண்ணவர்களாகிய எங்களது நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் ஏதோ ஒரு காரணத்திற்காக மிகக் கவனமாக அவதானிக்கும் இந்த ALIEN கள் ஒரு காலத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளக் கூடும். இவ்விதமாக இன்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

தொடரும்...






YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்


CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE



ELECTRICAL REPAIRS
உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883

## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



*" சிந்தனையில் எற்பட்ட தடங்கல்"*

ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பாக **Y2K** என்ற பெயரில், மனித வாழ்க்கையின் எதிர்காலம் என்னவாகும்? கணணிகள் கைவிட்டு விடுமா? அதனால் புதிய நூற்றாண்டு மலருமா? என்பது போன்ற ஒரு பயம் கலந்த கேள்விக்குறியுடன் 2000 ஆம் ஆண்டை மக்கள் எதிர் பார்த்து இருந்த வேளையில், பல நூறு ஆண்டுகள் சுயமாக ஆண்டு வந்த மனித வாழ்க்கையை இடையில் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான உலகம ஆழ்வதை ஆட, மனிதன் தனது வாழ்க்கையை தானே ஆழும் வண்ணம ஒரு சாதாரண மனிதன் எப்படி தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அவனது வாழ்வையும் அவனைச் சுற்றி உள்ளவர்களின வாழ்வையும் சுமூகமாக அமைக்கலாம் என்றும் அதிலும் இடம் பெயர்ந்து இந்த மண்ணில் வாழ வந்திருக்கும் எமது இனம் என்ன செய்யலாம் என்று தன்னையும், தன்னை சுற்றி வாழ்பவர்களையும் பார்த்து சிந்திக்கத தொடங்கிய இந்த சாதாரண மனிதன் தனது சிந்தனைகளையும், எண்ணங்களையும் உலக தமிழோசை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள தொடங்கினான்.

ஒரு சாதாரண மனிதன் தனது வாழ்க்கையில் எவ்வளவு கவனமாக நடந்தும் பிரச்சினைகள் வராதவாறு இயன்றவரை பார்த்துக் கொண்டும், நேர்மையாகயும் வாழ்ந்த போதும் வாழ்க்கையில் எல்லோருக்கும் நியதி அல்லது விதி என்று ஒன்று இருப்பதனால் எதிர்பாராத வகையில் சில பிரச்சினைகள் தலை தூக்கவே செய்கின்றன. அப்படி சில பிரச்சினைகள இந்த சாதாரண மனிதனையும் தாக்கிய காரணத்தினால் அவனது சிந்தனையிலும், உலக தமிழோசை மூலம் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ள முடியாமலும் தடை விழுந்தது.

